# வீட்டு சேவைத்துறை: வீட்டுப் பராமரிப்புத் தொழிலாளர்கள் COVID-19 தேவைகள்

இந்த ஆவணம் வீட்டு சேவைத் துறைக்கும் குறிப்பாக வீட்டுப் பராமரிப்புத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இந்த ஆவணத்தின் நோக்கங்களுக்காக, ஒரு வீட்டு சேவை பணியாளர் என்பவர் ஒன்று அல்லது பல முதலாளிகளால் சம்பளம் அளிக்கப்படுபவராகவும் வீட்டுச் சேவைகளை தனி நபருக்கோ அல்லது வீட்டுக்கோ அல்லது ஒரு வீட்டு பராமரிப்பு பணியாளராக ஒரு தனியார் வீட்டுக்கோ பணியாற்றும் எந்தவொரு பணியாளரையும் குறிக்கும். ஒரு வீட்டு சேவை பணியாளரில் மணிக்கணக்கில் மற்றும் சம்பளமாக வாங்கும் வேலையாட்கள், தனிப்பட்ட உழைப்பு வழங்கும் முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் போன்ற சுயேட்சையான ஒப்பந்ததாரர்கள் ஆகியோரும் அடங்குவர். ஒரு முதலாளி என்பவருக்கான வரையறையில் ஒரு வீட்டு பராமரிப்புப் பணியாளர் சேவைகள் வழங்குவதற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊதியம் வழங்கும் ஒரு பணியமர்த்தும் நிறுவனம், தனி நபர்கள், குடித்தனங்கள் மற்றும் முதலாளிகள் (உ.ம், பணியாளர் முகமைகள் மற்றும் இணைய தளமேடைகள் உள்ளிட்ட நேரடிச் சேவைகளை வழங்கும் தொழில்கள்) ஆகியோர் அடங்குவர். ஒன்றுக்குமேற்பட்ட முதலாளிகள் இருந்தால் ஒவ்வொரு முதலாளி/தொழிலாளிக்கும் பணிசார் உறவுக்கான தேவைகள் பொருந்தும்.

பிற வீட்டுப் பணியாளர்களைப் பொறுத்தவரை அவர்களது பணி ஆளுநரின் பிரகடனம் 20-05ன் கீழ் அத்தியாவசியமானதாக வரையறுக்கப்படாததால் தனிப்பட்ட வழிகாட்டுதல்கள் மூலம் உள்ளடக்கப்படுகின்றனர். வீட்டுப் பராமரிப்பு பணியாளர்கள் என்போர் யாரெனில், ஒரு தனியார் வீட்டுக்குள் அல்லது அதைச் சுற்றிலும் செயல்திறன் குறைபாடுள்ளோருக்காக தனி நபர் பராமரிப்புச் சேவைகளை வழங்குவோர் அல்லது நோய்வாய்ப்பட்டோர், வயதானோர் அல்லது வேறுவகையில் பாதிக்கப்படக்கூடியோருக்கு உண்ணுதல், குளித்தல் மற்றும் ஆடையுடுத்துதல் போன்ற “வாழ்வதற்கான அன்றாடச் செயல்பாடுகளை” நடத்த உதவுவோர் ஆவர். அன்றாட நடவடிக்கைகளில் உதவுதற்கும் மேலாக, ஒரு வீட்டுப் பராமரிப்புப் பணியாளர் “தினசரி வாழ்க்கையின் செயல்கருவியாக” இருந்து தனிநபர்களை சமூகத்தில் சுதந்திரமாக வாழும்படி உதவுகிறார். வீட்டுப் பராமரிப்புப் பணியாளர்களில் RCW 18.88B ன் கீழ் மாகாண Department of Health-ஆல் சான்றளிக்கப்பட்டோர் உள்ளிட்ட ஏனையோரும் அடங்குவர்.

ஆளுநரின் பிரகடனம் 20-05ன்படி வீட்டுப்பராமரிப்புப் பணியாளர்களின் பணிகள் அத்தியாவசியமானவையாக கருதப்படுகின்றன. எனவே COVID-19 பெருந்தொற்று சமயத்தில் பல சேவைகள் பாதிக்கப்படாமல் உள்ளன. கீழே ஆவணப்படுத்தப்பட்டபடி உடல் நலம் மற்றும் பாதுகாப்புத் தேவைகள்

முதலாளிகள் மற்றும் தனி வீட்டுப் பராமரிப்புப் பணியாளர்களால் பின்பற்றப்படவேண்டும்.

ஒரேயொரு வேலையாளை மட்டும் வைத்திருக்கும் ஒரு முதலாளிக்கு ஏதேனும் ஏற்பாடு *முழுவதுமாக* பொருந்தவில்லை எனில், அத்தகு முதலாளி அதைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

வீட்டுச் சேவைத்துறையில் இருக்கும் பணியாளர்கள் வெவ்வேறுவிதங்களில் வேலைசெய்வதற்கு மறுக்கும் திறனில், ஊதியத்துடன் கூடிய நோய்விடுப்புப் பெறுவதில் மற்றும் வேலையின்மை பலன்களைப் பெறுவதில் கட்டுப்பாடுகளை சந்திக்கிறார்கள் என்பது ஏற்கக்கூடியதே. அனைத்து பணிபுரியும் சூழல்களிலும், முதலாளிகள் தங்கள் பணியாளர் பாதுகாப்புகளைப் பெறுவதில் உள்ள வரம்புகள் குறித்து தெரிந்திருக்கவேண்டும்.

## <u>பாதுகாப்பு மற்றும் உடல் நலத் தேவைகள்</u>

அனைத்து வீட்டு சேவைக்கான முதலாளிகளுக்கும் உள்ள ஒரு பொதுவான கடமை, மாகாண மற்றும் மத்திய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஏற்ற ஒரு பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான பணியிடத்தை வைத்திருப்பதாகும். அத்துடன், பின்வரும் ஆளுநரின் “Safe Start” பிரகடனம் 20-25.4ல் கோடிட்டுக்காட்டியபடி COVID-19 வேலையிடத்து பாதுகாப்பு நடைமுறைகளையும் L&I <u>பணியிடங்களுக்கான பொதுத் தேவைகள் மற்றும் தடுப்புத் திட்டங்கள்</u> ஆகியவற்றுக்கு இணங்கவும் செயல்பட வேண்டும். வாஷிங்டன் மாகாண Department of Health மற்றும் வாஷிங்டன் மாகாண Department of Social and Health Services பணியாளர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டுதல் ஆவணங்களை உருவாக்கியுள்ளன:

- <u>வாஷிங்டன் மாகாண Department of Health வழங்கும் வீட்டுப்பராமரிப்பு வழங்குவோருக்கான பரிந்துரைகள்</u>
- <u>வாஷிங்டன் மாகாண Department of Social and Health Servicesன் COVID-19 தீவிரதொற்று காலத்தில் பாதுகாப்பு பராமரிப்பு வழங்குவதற்கு தனிப்பட்ட பணியாளர்களுக்கான (IPs) வழிகாட்டி</u>

நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளும் வீட்டுப் பராமரிப்பு முகமைகள் போன்ற முதலாளி அல்லது இணை முதலாளி மற்றும் வாஷிங்டன் மாகாணம் பணியாளர்களை பாதுகாக்க பின்வருபவை உள்ளிட்ட COVID-19 தேவைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்:

- வேலையாட்களுக்கு அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ளும் மொழியில் கொரோனாவைரஸ் குறித்தும் பரவலைத் தடுக்கும் முறைகள் குறித்தும் முதலாளியின் COVID-19 கொள்கைகள் குறித்தும் கற்பிக்க வேண்டும்.
- அனைத்து தொடர்புகளின்போதும் அனைத்து வேலையாட்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து முடிந்தவரை ஆறு அடி தூர விலகலை பேணவும். கறாரான உடல்ரீதியான இடைவெளி சாத்தியமில்லாத குறிப்பிட்ட பணியின்போது, தடுப்புகளை பயன்படுத்துதல், பணியாளர்களை அல்லது வாடிக்கையாளர்களைக் குறைத்தல்

அல்லது மூடப்பட்ட பகுதிகள் மற்றும் வெவ்வேறு நேரங்களில் இடைவெளிகள் மற்றும் முறைப்பணி தொடங்கும் நேரத்தை அமைத்தல் போன்ற பிற தடுப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தலாம்.

- வேலையாளுக்கு செலவின்றி கையுறைகள், கண்ணாடிகள், முகக் கவசம் மற்றும் முகமூடிகள் போன்ற பொருத்தமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE) செய்யும் வேலைக்குத் தக்கபடி வழங்கவேண்டும். கூடுதல் விபரங்களுக்கு கொரோனாவைரஸ் முகமூடிகள் மற்றும் முகக்கவசத் தேவைகளைப் பார்க்கவும். COVID பாதிக்கப்பட்ட அல்லது அறிகுறியுள்ள நபர்களுக்கு பராமரிப்பு வழங்கும் வீட்டுப் பராமரிப்பு பணியாளர்கள் "மிக அதிக அபாய" சூழலில் இருப்பதை உணர்ந்து பொருத்தமான PPE வழங்கப்படவேண்டும். அறிகுறிகள் இல்லாத வாடிக்கையாளர்களை கவனித்துக்கொள்ளும் வீட்டுப் பராமரிப்புப் பணியாளர்கள் "நடுத்தர அபாய" வகையினத்தில் இருப்பதாகக் கருதி அறுவைசிகிட்சைக்கான முகக்கவசங்களும் சூழ்நிலைக்கு ஏற்ற சாத்தியமான PPE உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும். அத்துடன், முகத்தை மூடும் துணியும் முதலாளிகளால் வழங்கப்பட வேண்டும். Department of Labor & Industriesன் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய விதிகள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் அதிகளவு பாதுகாப்பு தேவை என அத்தகு சூழல் வரையறுக்கப்படாத பட்சத்தில் அவற்றை தனியாக பணியாற்றாத ஒவ்வொரு பணியாளரும் அல்லது சமூகத்தில் பணியாற்றும்போதும் அணியவேண்டும். Department of Health வழிகாட்டுதலில் முகத்தை மூடும் துணி பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஓர் அலுவலகத்தில், வாகனத்தில் அல்லது பணியிடத்தில் தனியாக வேலைசெய்யும்போது; தனி நபர் காதுகேளாதவராகவோ அல்லது கேட்புத்திறன் குறைபாடுள்ளவராகவோ இருந்தால், மேலும் இன்னொருவருடன் தொடர்புகொள்ள முக அடையாளங்கள், முகபாவம் மற்றும் வாயசைவு போன்றவற்றை தொடர்புகொள்வதில் ஒரு பகுதியாகக் கொண்டவராக இருந்தால்; தனியாள் ஒருவர் நோய்வாய்ப்பட்டோ அல்லது முகமூடியை முறையாக அணியமுடியாத நிலையில் இருந்தால்; அல்லது பணியில் இன்னொருவருடன் நேரடித்தொடர்பு இல்லாதிருந்தால் முகத்தை மூடிக்கொள்ளும் துணிக்கான தேவைக்கு விலக்களிக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவை உள்ளிட்ட பணியாளர்களின் பாதுகாப்புக்கான COVID-19 தேவைகள் மற்றும் வழிகாட்டுதல்களை முதலாளிகள் பின்பற்றவேண்டும். தனி நுகர்வோரால் பணியமர்த்தப்பட்டும், தனிப்பட்ட வழங்குநராக DSHS மூலம் ஊதியமளிக்கப்பட்டும், வாடிக்கையாளர்-முதலாளி மூலம் தேர்வுசெய்யப்பட்டு, அட்டவணையிடப்பட்டு மேற்பார்வையிடப்படுவோராகவும் வீட்டுப் பராமரிப்பு பணியாளர்கள் உள்ளனர். இத்தகு சூழலில், COVID பரவலையும் தொற்றையும் தடுப்பதற்கான வழிகாட்டுதல்களை DSHS வெளியிடுகிறது:

- போதிய விநியோகப் பராமரிப்புடன் அடிக்கடியும் போதிய அளவிலும் கைகளைக் கழுவுதலை உறுதிசெய்தல். கருவிகள் அல்லது பகிரக்கூடிய பிற பொருட்கள் மூலம் தொற்று கடத்தப்படுவதைத் தடுக்க

பாதுகாப்பானதும் பொருந்தக்கூடியதுமான பயன்படுத்திக் கழிக்கத்தக்க கையுறைகளை பயன்படுத்துதல்.

- பொதுவாக தொடப்படும் மேற்பரப்புகளை அடிக்கடி சுத்தப்படுத்துவதையும் சுத்திகரித்தலையும் உறுதிசெய்தல்.
- பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் முறைப்பணியைத் தொடங்கும்போது அவர்களுக்கு COVID-19 அறிகுறிகள் இருக்கிறதா என சோதித்தல். வீட்டுப் பராமரிப்புப் பணியாளர்கள் நோயுற்றதாக உணர்ந்தாலோ அல்லது தோன்றினாலோ வீட்டிலேயே இருக்கவேண்டும் அல்லது உடனடியாக வீட்டுக்குச் செல்லவேண்டும். ஒரு வேலையாளுக்கு COVID-19 தொற்று உறுதிசெய்யப்பட்டாலோ அல்லது வாய்ப்பிருந்தாலோ, அவர் பணியாற்றிய, தொட்ட மேற்பரப்புகள் போன்றவற்றை முதலாளியின் அலுவலகப் பகுதியின் வசிக்கக்கூடாத இடமாகக் கருதி அந்தப் பகுதியும் உபகரணமும் சுத்தம்செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படும்வரை காவல் வளையத்துக்குள் வைத்திருக்கவேண்டும். நோய் கட்டுப்பாட்டுக்காக மையங்கள் அமைத்த நன்கு சுத்தப்படுத்தலும் சுத்திகரித்தலும் ஆகியவற்றுக்கான சுத்தப்படுத்தும் வழிகாட்டுதல்களை பின்பற்றவும்.
- முதலாளிக்கு COVID உறுதிசெய்யப்பட்டதும் வீட்டுப் பராமரிப்புப் பணியாளருக்கு அவர்களது வேலையின் காரணமாக தனிநபர்கள் பாதிப்புக்கு ஆளாகியுள்ளதை உடனடியாகத் தெரிவிக்கவும்.

வீட்டுப் பராமரிப்புப் பணியாளருக்கு அவர்களது வேலையின் காரணமாக COVID உறுதிசெய்யப்பட்ட தனி நபர்களிடமிருந்து பாதிப்புக்கு ஆளாகியுள்ளதை முதலாளி உடனடியாகத் தெரிவிக்கவும். ஒரு வீட்டுப் பராமரிப்புப் பணியாளர் தனது சூழ்நிலை பாதுகாப்பற்றதெனக் கருதினால் சமூகப் பணியாளரையோ அல்லது முகமை மேற்பார்வையாளரையோ தொடர்புகொள்ள வேண்டும். ஒரு முதலாளி சுயபாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொண்டுள்ள ஒரு பணியாளருக்கு எதிராக எதிர்மறை நடவடிக்கையை எடுப்பது, அவர்களது வேலைமறுப்பு குறிப்பிட்ட தேவைகளை பூர்த்திசெய்யும் பட்சத்தில் சட்டம் RCW 49.17 ன்கீழ் இது சட்டத்திற்குப் புறம்பானது. இந்த வெளியீடுகளில் இதுகுறித்த தகவல்கள் உள்ளன: பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் உடல் நலப் பாகுபாடு துண்டு பிரசுரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் உடல் நலப் பாகுபாடு துண்டு பிரசுரம் ஸ்பானிய மொழியில்.

ஒரு பணியிடத்திலிருந்து COVID-19 தாக்கத்தின் அபாயத்தினால் அவ்விடத்தின் பாதுகாப்பின்மை காரணமாக வேலையாட்கள் அவர்களாகவே விலகிக்கொள்ள முடிவெடுத்தால், குறிப்பிட்ட விடுப்பு அல்லது வேலையின்மை பலன்களைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது. முதலாளிகள் வேலையாளுக்கு மாற்றுவேலை ஏற்பாடுசெய்ய இயலாதபட்சத்தில் அதிக அபாயமுள்ள தனி நபர்களுக்கு முதலாளி வழங்கும் சேர்ந்துள்ள விடுப்பு அல்லது வேலையின்மை பலன்களை அணுகும் வாய்ப்புகளோடு பிரகடனம் 20-46 வழங்கும் காப்பினை அளிக்கவேண்டும். பிற பணியாளர்கள் குடும்பங்களின் முதல் கொரோனாவைரஸ் எதிர்வினை சட்டத்தில் உள்ளடங்கிய விரிவாக்கப்பட்ட குடும்ப மற்றும் மருத்துவ விடுப்புகளை, வேலையின்மை பலன்களை அல்லது பிற ஊதியத்துடன் கூடிய நேரவிடுப்பை சூழ்நிலைகளுக்குத் தக்க பெறக்கூடும்.

கூடுதல் தகவல்கள் இங்கே உள்ளன: [நாவல் கொரோனாவைரஸ் தீவிர நோய்ப்பரவல் (COVID-19) தகவல்கள்]() மற்றும் [வாஷிங்டன் Family Care Act மற்றும் Families First Coronavirus Response Actன்கீழ் ஊதியத்துடன் கூடிய விடுப்பு]().

**வீட்டுப் பராமரிப்புப் பணியாளர்கள்:**
கூடுதலாக பணியாளர்கள் செய்யவேண்டியது:

1. உடல் நலமில்லை எனில் வீட்டில் இருக்கவும். COVID சந்தேகிக்கப்பட்டாலோ அல்லது உறுதியானாலோ முதலாளிக்குத் தெரிவியுங்கள்.
2. COVID-19 உள்ள நோயுற்ற குடும்ப உறுப்பினர் வீட்டில் இருந்தால் மேற்பார்வையாளருக்குத் தெரிவியுங்கள். ஒரு வேலையாளின் குடும்ப உறுப்பினர் COVID-19 தொற்றால் நோயுற்றிருந்தால், அந்தப் பணியாளர் மாகாண சுகாதாரத்துறை ஏற்படுத்தியுள்ள தனிமைப்படுத்தல்/தடுப்புக்காப்பு தேவைகளை பின்பற்றவேண்டும்.
3. வேலைக்குத் திரும்புமுன்பாக நீங்கள் பராமரிப்பு வழங்கும் நபருக்கு காய்ச்சல், இருமல் அல்லது மூச்சுத்திணறல் போன்ற புதிய அறிகுறிகள் உள்ளனவா என கேட்டுக்கொள்ளவும். அவ்வாறு இருப்பின், சேவைகளை தாமதிக்கவோ அல்லது COVID-19 வீட்டுப் பராமரிப்பு வழிகாட்டுதல் ஆவணத்தில் பட்டியலிடப்பட்ட முன்னெச்சரிக்கைகளை பின்பற்றவோ செய்யவும்.
4. வீட்டிலுள்ள பிறருக்கும் உங்களுக்கும் இடையில் குறைந்தது ஆறு அடி இடைவெளியை முடிந்தவரை பேணவும். குறிப்பிட்ட வேலைகளில் உடல்ரீதியான இடைவெளி சாத்தியமில்லாதபோது, முகமூடிகள் மற்றும் PPE போன்ற பிற தடுப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தவும்.
5. உங்கள் முறைப்பணியின் தொடக்கத்திலும் முடிவிலும் மற்றும் உணவு தயாரிக்கும் முன்னும் பின்னும் அல்லது உடல் திரவங்களைத் தொட நேர்கையிலும் கைகளை அடிக்கடி கழுவவும். கைகளை குறைந்தது 20 நொடிகளுக்கு சோப்பாலும் நீராலும் கழுவவும் அல்லது குறைந்தது 60% ஆல்கஹால் உள்ள ஆல்கஹால் அடிப்படையில் உள்ள சுத்திகரிப்பானை பயன்படுத்தவும்.
6. முடிந்தவரை வீட்டுக்குள் உள்ள மேற்பரப்புகளை அல்லது பொருட்களைத் தொடுவதைத் தவிர்க்கவும். வேலைசெய்யும்போது அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புகளை அடிக்கடி கழுவவும்.

**ஒரு வீட்டுப் பராமரிப்புப் பணியாளரை வேலைக்கு எடுக்கும் தனிப்பட்ட வாடிக்கையான முதலாளி அவர்களது சொந்த வீட்டில் வழங்கவேண்டிய சேவைகள்:**

7. வாடிக்கையாளர் வீட்டில் தடுப்புக்காப்பில், நோயில் அல்லது COVID-19 தொடர்பான அறிகுறிகள் அதிகரிக்கும்போது வீட்டுப் பராமரிப்புப் பணியாளர்களுக்கு தெரியப்படுத்தவும்.
8. வீட்டுப் பராமரிப்புப் பணியாளருக்கு உடல் நலமில்லை எனில் அல்லது அவ்வாறு தோற்றமளித்தால் அவர்களுக்கு குணமாகும்வரை வேலைசெய்யவேண்டாமென வலியுறுத்தவும்.
9. வீட்டுப் பராமரிப்புப் பணியாளர் இருக்கும்போது அடிக்கடி கைகளைக் கழுவுங்கள்.

10. முடிந்தவரை குறைந்தது ஆறு அடி இடைவெளியை வீட்டுப்பராமரிப்புப் பணியாளரிடமிருந்து பேணி அவரோடு மிக அருகாமையில் இருக்கும் நேரத்தைக் குறைக்கவும்.

**<u>பணியிட வழிகாட்டல்கள்</u>**

11. வீட்டுப் பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும்போது இருக்கக்கூடிய எந்தத் தனிநபரும் ஒரு முகக்கவசத்தை அணியமுடிந்தால் குறைந்தது முகத்தை மூடிக்கொள்ளும் ஒரு துணியை அணிந்து சமூகப் பரவலின் அபாயத்தைத் தவிர்க்கவேண்டும். அத்தகு தனி நபர்கள் PPE தேவைகளைப் பின்பற்ற அதிகம் ஊக்குவிக்கப்படுகிறார்கள். முடிந்தால், வீட்டுப்பணியாளர் வேலையில் இருக்கும்போது வீட்டில் இருக்கும் நபர்கள் அவர்களிடமிருந்து விலகி வேறொரு பகுதிக்கு, சிறிய அறைகளிலிருந்து மாறி வீட்டு வேலையாளிடமிருந்து பெரியளவில் சமூக இடைவெளிக்கு வாய்ப்புள்ள பெரிய அறைகளுக்கு இடமாற்றம் செய்யலாம். பணியிடத்திலுள்ள தனி நபர்கள் எண்ணத்தாலோ, மேம்பட்டுவருவதாலோ அல்லது செயல்திறனின்மையாலோ முகத்தை மூடிக்கொள்ளும் துணிகளை மற்றும்/அல்லது PPE அணிவது ஆகியவற்றுக்கு இணங்கமுடியாமல் போக வாய்ப்பிருந்தாலோ, இணங்கவேண்டிய அவசியமில்லாதிருக்கலாம்.
12. தொடர்புகளை சுருக்கமாக வைத்திருங்கள். முக்கிய விபரங்களை காணொலியில் விவாதிக்க இயலவில்லை எனில், நேர்முகச் சந்திப்புகளை சுருக்கமாகவும் உரையாடல் முழுவதும் ஆறு அடி இடைவெளியையும் பேணவும். வீட்டுப்பராமரிப்பைப் பெறும் தனி நபர்கள் எண்ணத்தாலோ, மேம்பட்டுவருவதாலோ அல்லது செயல்திறனின்மையாலோ முகத்தை மூடிக்கொள்ளும் துணிகளை மற்றும்/அல்லது PPE அணிவது ஆகியவற்றுக்கு இணங்கமுடியாமல் போக வாய்ப்பிருந்தாலோ, இணங்கவேண்டிய அவசியமில்லாதிருக்கலாம்.
13. வேலையிடத்தில் அல்லது வீட்டில் மெல்லிழைத்தாள்களும் குப்பைக்கூடைகளும் இருக்கவேண்டும்.
14. பணியாளர்கள் பணியாற்றுமிடம் பாதுகாப்பானதாகக் கருதாவிடில் அங்கிருந்து விலகிக்கொள்ள அவர்களுக்குள்ள உரிமை பற்றி முதலாளிகள் பணியாளர்களிடம் கூறவேண்டும். அதேபோல அத்தகு சூழல்களில் அவர்களுடைய விடுப்பு அல்லது வேலையின்மை பலன்களைப் பெறும் வாய்ப்பு குறித்தும் கூறவேண்டும்.
15. ஒரு வீட்டுப்பணியாளர் அடிக்கடி சுத்தம்செய்தல் மற்றும் சுத்திகரித்தல் போன்ற கூடுதல் வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தால், அது எழுத்துபூர்வ ஒப்பந்தத்தில் தெரியப்படுத்தப்படுவதோடு பணியாளர்களின் வேலை நேரத்திற்கேற்ப ஊதியம் வழங்க வேண்டும்.
16. பணியிடத்திலுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து பயிற்சிகளும் ஊதிய நேரத்தில் நிகழவேண்டும்.
17. முடிந்தபோதெல்லாம் பணியாளர்கள் வாகனத்துக்கு ஒரு நபர் வீதமென வேலையிடத்துக்கு தனியாக பயணிக்கவேண்டும்.
18. பணியாளர்கள் ஒரு மைய இருப்பிடத்தில் சந்தித்து வேலையிடத்துக்கு நிறுவனத்தின் சொந்த வாகனங்களில் பயணிப்பதாயிருந்தால், ஒரு குழுவுக்கு ஒரு வாகனம் என்று இருக்கவேண்டும். சுழற்சிக்கு

உட்படுத்தக்கூடாது. நிறுவனத்தின் வாகனங்களில் அல்லது மற்ற பலர் அமரக்கூடிய வாகனத்தில் கொள்திறனை 50% எனக் குறைத்து பயணிப்பதோடு சமூக இடைவெளியையும் PPE தேவைகளையும் கொரோனாவைரஸ் முகம் மூடுதல் மற்றும் முகக்கவசத் தேவைகளில் விளக்கப்பட்டபடி மேற்கொள்ளவும்.

பொருந்துமெனில், பணியாளர் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் போன்றவற்றில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக L&I's Division of Occupational Safety and Health (DOSH)-ன்கீழ் அமலாக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.

- L&I's Division of Occupational Safety and Health (DOSH)யிடமிருந்து முதலாளிகள் COVID-19 தடுப்பு ஆலோசனைகள் மற்றும் உதவியைக் கோரலாம்.
- பணியாளரின் பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல்நலப் புகார்களை L&I DOSH பாதுகாப்பு சேவைமையத்தில் சமர்ப்பிக்கலாம்: (1-800-423-7233) அல்லது adag235@lni.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம்.
- ஒப்பந்த நடைமுறைகளின்படி இணங்குவது குறித்த பொதுவான கேள்விகளை பின்வரும் இணைப்பின் மூலம் மாகாண தொழில் பதிலளிப்பு மையத்தில் சமர்ப்பிக்கலாம் https://coronavirus.wa.gov/how-you-can-help/covid-19-business-and-worker-inquiries.
- பிரகடனம் 20-25 தொடர்பான அனைத்து பிற மீறல்களையும் https://bit.ly/covid-compliance என்ற தளத்தில் சமர்ப்பிக்கலாம்.